(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) SUBJECT CODE 24 PTM 102

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1 சிவணிய என்ற சொல்லின் பொருள் யாது?
அ) பொருந்திய ஆ) அறிதல் இ) இயற்கை ஈ) மறை

2 தேக்கு–எவ்வகைக் குற்றியலுகரம்?
அ) நெடில்தொடர் ஆ) வன்தொடர் இ) மென்தொடர் ஈ) இடைத்தொடர்

3 பெயர்கள் எத்தனை வகைகளாகச் சுட்டிக் கூறப்படுகின்றன?
அ) 4 ஆ) 6 இ) 3 ஈ) 2

4 ஏனைப் புளிப்பெயர் ------------- மிகுமே.
அ) வல்லெழுத்து ஆ) மெல்லெழுத்து இ) சுட்டு ஈ) வினா

5 பெண்டு எனும் சொல் எச்சாரியை பெறும்?
அ) அன் ஆ) அம் இ) அக்கு ஈ) வற்று

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6 தனி எழுத்திற்கு ஒலி வரையறை யாது?
7. இதழியையப் பிறப்பன எந்த எழுத்துகள் ஆகும்?
8. நிறைப் பெயருக்கு இரண்டு சான்றுகள் தருக.
9. பல,சில என்பவை எவ்வாறு மாறும்?
10. பீர் எனும் சொல் எச்சாரியை பெற்று வரும்?

**பகுதி – ஆ** (5 x 5 = 25 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) எழுத்துகளுக்குரிய மாத்திரைகளை அளவிட்டெழுதுக.

(அல்லது)

ஆ) உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவம் குறித்துரைக்கவும். **(த.பி.பா.)**

12. அ) மொழி முதல் எழுத்துகளை விளக்குக

(அல்லது)

ஆ) சார்பெழுத்துகள் பிறக்கும் முறை குறித்து மொழி மரபு கூறுவனவற்றை எழுதுக.

13. அ) வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகள் குறித்தெழுதுக.

(அல்லது)

ஆ) அளவு, நிறை, எண்ணுப் பெயர்ப் புணர்ச்சிகளை விளக்குக.

14. அ) மகர ஈற்று இடப்பெயர்கள் உருபேற்கும் முறையை உருபியல் வழியாக எழுதுக.

(அல்லது)

ஆ) ஈகார ஈற்றுச் சொற்களை உயிர் மயங்கியல் எங்ஙனம் உரைக்கின்றது?

15. அ) நகர ஈற்றுச் சொற்கள் புணரும் முறையைக் காட்டுக.

(அல்லது)

ஆ) தொள்ளாயிரம் - புணர்ச்சி விதி கூறுக.

**பகுதி – இ (5 x 8 = 40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)**

16. அ) சிறப்புப் பாயிரம் நுவலும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) மெய்மயக்கம் பற்றிக் கட்டுரை வரைக.

17. அ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுடன் விவரி.

(அல்லது)

ஆ) எழுத்துகளின் பிறப்பு முறையைக் கட்டுரை ஆக்குக.

18. அ) சாரியைகள் பயின்று வரும் இடங்களைச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

ஆ) இரண்டாம் வேற்றுமைத் திரிபுகளைத் தொகை மரபு வழியாக ஆய்க.

19. அ) சாரியை பெறும் உயிரீறுகளை உருபியல் வழியாக எடுத்தியம்புக.

(அல்லது)

ஆ) ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.

20. அ) மெல்லின ஒற்றுகள் புணரும் தன்மையை ஆராய்க.

(அல்லது)

ஆ) குற்றியலுகர எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி பற்றிய செய்திகளை வகைப்படுத்துக.